PAFFREL
නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.
சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.
PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

2022-04-15

**මහජන අරගලය අවතක්සේරු නොකරමු - මහජන නියෝජිත වගකීම ඉටුකරමු**

ශ්‍රී ලංකාව මේ වන විට මුහුණදෙමින් සිටින බරපතල දේශපාලන, ආර්ථික හා සමාජයීය අර්බුදය හේතුවෙන් සමස්ත ජනතාවට මුහුණදීමට සිදුව ඇති අපහසුතා මත පදනම් වෙමින් ගොඩනැගුණු සමාජ අරගලය අපගේ පාලකයින් අවතක්සේරු කරමින් හා මහජන නියෝජිතයින් ලෙස ඔවුන්ගේ වගකීම් පැහැර හරිමින් කටයුතු කරමින් සිටින බව පෙනීයයි. පසුගිය දින කිහිපය තුළ ආණ්ඩුවේ ක්‍රියාකලාපය හා පාර්ලිමේන්තුව තුළ පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන්ගෙන් බහුතරය හා පක්ෂ නායකයින් කටයුතු කල වගකීම් විරහිතභාවය පිළිබඳව පැෆ්රල් සංවිධානය දැඩි කණගාටුව පලකරමු.

ජනතා අරගල ප්‍රජාතන්ත්‍රවාදී රාමුව තහවුරු කලද එයින් ගම්‍යවන්නේ පාලකයන්ගේ අසමත්භාවයයි. මේ මොහොතේ පවතින ගැටලුවට පිළිතුරු සෙවීම ව්‍යවස්ථා රාමුව තුළ සිදුකිරීමේ වගකීම පැවරෙන්නේ ජනාධිපතිවරයාට, කැබිනට් මණ්ඩලයට හා පාර්ලිමේන්තුවට බව අවධාරණය කරමු.

එහෙත් ඒ සඳහා ප්‍රමාණවත් සූදානමක් හෝ වැඩපිළිවෙලක් ඉදිරිපත් කිරීමට ආණ්ඩුව හෝ පාර්ලිමේන්තුව මෙතෙක් සමත්වී නොමැත. අඩුම තරමින් පාර්ලිමේන්තුව රැස්වීමට නියමිත 19, 20, 21 දිනවල පාර්ලිමේන්තු න්‍යාය පත්‍රයේ පවා ඒ සඳහා ප්‍රමාණවත් අවධානයක් ලබාදී නොමැත. ඒ හරහා සිදුවිය හැක්කේ මහජන නියෝජිතයින් පිළිබඳ අප්‍රසාදයද තවදුරටත් වර්ධනයවීමකි. එමෙන්ම රට බරපතල ලෙස ආර්ථික අගාධයකට ගමන් කිරීමකි. ඒ හරහා ගොඩනැගෙන සමාජ අසහනය පාලනය කල නොහැකි මට්ටමකට වර්ධනය වුවහොත් රට තුළ ප්‍රචණ්ඩත්වය වර්ධනයවී මනුෂ්‍ය ජීවිත අහිමි වුවහොත් ඔබ සියලු දෙනාට එම වගකීමෙන් මිදිය නොහැකි වනු ඇත.

එබැවින් මේ මොහොතේ ජනාධිපතිවරයා ප්‍රමුඛ ආණ්ඩුව සමස්ත පාර්ලිමේන්තුව කඩිනමින් රැස්වී මෙම ගැටලුවලට විසඳුම් ඉදිරිපත් කල යුතුව ඇත. රට මෙතරම් ආර්ථික, දේශපාලන අර්බුදයක තිබියදී පාර්ලිමේන්තුව නිතිපතා රැස්නොවීම අතිශයින්ම පුදුමසහගතය.

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

එබැවින් මේ මොහොතේ ජනාධිපතිවරයා ප්‍රමුඛ ආණ්ඩුව සමස්ත පාර්ලිමේන්තුව කඩිනමින් රැස්වී මෙම ගැටලුවලට විසඳුම් ඉදිරිපත් කල යුතුව ඇත. රට මෙතරම් ආර්ථික, දේශපාලන අර්බුදයක තිබියදී පාර්ලිමේන්තුව නිතිපතා රැස්නොවීම අතිශයින්ම පුදුමසහගතය.

සමබිමක් නිර්මාණය කිරීමට දායක වෙමින් පක්ෂ විපක්ෂ ඔබ සියලු දෙනාට මහජන නියෝජිතයින් ලෙස තේරීපත්වීම සඳහා දායකත්වය සැපයූ මැතිවරණ නිරීක්ෂණ සංවිධානයක් වශයෙන් පැෆ්රල් සංවිධානයට ආණ්ඩුවේත් විපක්ෂයේත් මහජන නියෝජිතයන්ට කරුණු කිහිපයක් අවධාරණය කල යුතුව ඇත.

1. රට තුළ ආර්ථික, දේශපාලන හා සමාජ අර්බුධයන් ඇති බව පිළිගනිමින් හා එම තමන් වගකිව යුතු බවට සිහි තබාගනිමින් ඊට විසඳුම් සෙවීමේ මුඛ්‍ය වගකීම තමන් සතු බව අවබෝධ කරගත යුතුය.

2. ආණ්ඩුව නියෝජනය කරන නායකයින් මහජන අරගලය අවතක්සේරු කරමින් කරන ප්‍රකාශ වහා නවතාදැමිය යුතුය.

3. පසුගිය මැතිවරණයේදී ලබාගත් ලබාගත් ජනවරම උපුටා දක්වමින් මහජන අරගලය මගින් දෙන පණිවිඩය නොසලකා අරගලය දියාරු කිරීමට දරණ සියලු උත්සාහයන්ගෙන් වැළකිය යුතුය.

4. ඔබ බොහෝ දෙනා කෙරෙහි මහජන විශ්වාසය බිඳවැටී ඇති බැවින් විශ්වාසය තහවුරු කිරීම සඳහා රජය පාර්ශවයෙන් පිළිගත හැකි අවම පියවරයන් හෝ ගැනීමට වහා කටයුතු කල යුතුව ඇත. 19 වන ව්‍යවස්ථා සංශෝධනය අවශ්‍ය සාධනීය වෙනස්කම් සහිතව ආණ්ඩුව විසින් කඩිනමින් පාර්ලිමේන්තුවට ගෙන ඒම හරහා විශ්වාසය ඇතිකරගැනීමේ පළමු පියවර තැබිය හැකි බව අපගේ විශ්වාසයයි.

5. ඒ වෙනුවෙන් රජයේ ඇති සූදානම රටට වහා ඉදිරිපත් කල යුතුය.


6. පාර්ලිමේන්තුවේ බහුතරය තබාගැනීමට හෝ ලබාගැනීමට ප්‍රජාතන්ත්‍ර විරෝධී උපක්‍රම භාවිත කරනවා වෙනුවට විවෘත සංවාදයක් ආරම්භ කිරීම හා සියලු පාර්ශව තවදුරටත් දේශපාලන ක්‍රීඩාවන්හි නොයෙදෙමින් අර්බුධයේ බරපතලකම නිවැරදිව තේරුම්ගනිමින් ඒ සඳහා අවංක උත්සාහයක් ගැනිය යුතුය.

7. විපක්ෂයේ දේශපාලන පක්ෂද රට මුහුණ දෙන බරපතල අභියෝගයේදී දේශපාලන වාසි අවාසි නොසලකා වගකීමෙන් කටයුතු කල යුතුය.

මේ මොහොතේ ඔබ සියලු දෙනා හැසිරෙන ආකාරයද ඉදිරි මැතිවරණ වලදී ඡන්දදායක හැසිරීමට සෘජුවම බලපානු ඇති බවට සිහිතබාගත යුතුය.

මේ මොහොතේ අප සියලු දෙනා  දේශපාලන, ජාති, ආගමික හා පංති භේද නොසලකා බල අරගල පසෙකලා කටයුතු කල යුතු මොහොතක් පැමිණ ඇත.

මැතිවරණ හරහා ලබාගන්නා දේශපාලන ස්ථාවරභාවය පමණක් මෙයට ස්ථිර විසඳුමක් නොවනු ඇත. ඉදිරි වසර දෙකක් සඳහාවත් අප පොදු වැඩපිළිවෙලකට යා යුතුව ඇත. ඒ සඳහා වර්තමාන ආණ්ඩුව අවංකව මහජන විරෝධය පිළිබඳ ප්‍රමාණවත් අවධානයක් යොමුකර පවතින ව්‍යවස්ථා රාමුව තුළ විසඳුම් සෙවීමට වහා ක්‍රියාත්මක විය යුතුය. ප්‍රමාදවන දිනයක් පාසා ජනතා අසහනය වැඩිවනු ඇති අතර එය ඔවුන් අරගලය දෙසට වඩාත් තල්ලු කරනු ඇත.



රෝහණ හෙට්ටිආරච්චි

විධායක අධ්‍යක්ෂ

2022.04.15

**மக்கள் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிடாமல் இருப்போம் - மக்கள் பிரதிநிதித்துவப் பொறுப்பை நிறைவேற்றுவோம்**

இலங்கை தற்போது எதிர்கொண்டு வரும் மோசமான அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான நெருக்கடிகள் காரணமாக ஒட்டுமொத்த மக்களும் முகங்கொடுத்துவரும் சிரமங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட சமூக எதிர்ப்புப் போராட்டங்களை எமது ஆட்சியாளர்கள் குறைத்து மதிப்பிட்டும், மக்கள் பிரதிநிதிகளாக தமது பொறுப்புக்களை தட்டிக்கழித்தும் வருகின்றமையைக் காணக்கூயதாவுள்ளது. கடந்த சில தினங்களாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் பாராளுமன்றத்தில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களின் பொறுப்பற்றதன்மை தொடர்பாக ∴பவ்ரல் அமைப்பு மிகுந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மக்கள் போராட்டங்கள் ஜனநாயகக் கட்டமைப்பை உறுதிப்படுத்தினாலும், அதன் மூலம் ஆட்சியாளர்களின் திறமையற்ற தன்மையும் வெளிக்காட்டி நிற்கின்றது. தற்போது நிலவுகின்ற நெருக்கடிகளுக்கான தீர்வுகளை அரசியலமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் மற்றும் பாராளுமன்றத்திற்கும் உள்ளதென்பதை வலியுறுத்துகின்றோம்.

ஆனாலும், அதற்குப் போதியளவு தயார்நிலையையோ அல்லது வேலைத்திட்டமொன்றையோ மேற்கொள்வதற்கு அரசாங்கமும் பாராளுமன்றமும் இதுவரை முன்வரவில்லை. குறைந்தபட்சம் பாராளுமன்ற அமர்வை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 19, 20, 21 தினங்களில் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் கூட அவற்றின் மீது போதுமானளவு கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் மக்கள் பிரதிநிதிகள் மீதான வெறுப்பு மேலும் அதிகரித்துள்ளது. அதேபோல் நாடு மோசமான வகையில் பொருளாதார பின்னடைவையும் சந்திக்கும். அதன்மூலம் உருவாக்கப்படும் சமூக விரக்தியைக் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு மேலும் அதிகரித்தால் நாட்டில் வன்முறைகள் மேலோங்கி மனித உயிர்கள் இழக்கப்பட்டால், அப்பொறுப்பிலிருந்து தாங்கள் அனைவரும் விடுபட இயலாது.

அதனால், இவ்வேளையில் ஜனாதிபதி அவர்கள் தலைமையிலான அரசாங்கமும் ஒட்டுமொத்த பாராளுமன்றமும் விரைவாக ஒன்றுகூடி இந்நெருக்கடிகளுக்குத் தீர்வுகளை முன்வைக்க வேண்டியுள்ளது. நாட்டில் இந்தளவுக்கு பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் நிலவுகின்ற போது பாராளுமன்றம் நாளாந்தம் கூடாதிருப்பது மிகவும் ஆச்சரியமாகவுள்ளது.

சமதளத்தை உருவாக்குவதற்காக பங்களித்த அரசாங்கக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் அனைவருக்கும் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுவதற்காக ஒத்துழைப்பு வழங்கிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பாக ∴பவ்ரல் அமைப்பு அரசாங்கத்திடமும், எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளிடமும் சில விடயங்களை வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது.

1. நாட்டில் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக ரீதியான நெருக்கடிகள் உண்டென்பதை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியமையை நினைவில் கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான பொறுப்பு தம்மிடமுள்ளதென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

2. அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் தலைவர்கள் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை குறைத்து மதிப்பிட்டுக் கூறுகின்ற கருத்துக்களை நிறுத்த வேண்டும்.

3. கடந்த தேர்தலில் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை மேற்கோள்காட்டி மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் மூலம் வலியுறுத்தப்படும் செய்திகளை நீர்க்கச் செய்வதற்கு எடுக்கும் முயற்சிகளைத் தடுக்க வேண்டும்.

4. உங்களில் பலர் மீதுள்ள மக்கள் நம்பிக்கை இழக்கப்பட்டிருப்பதால் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக அரச தரப்பினர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்தபட்ச படிமுறைகளையாவது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேவையான திருத்தங்களுடன் 19 ஆவது அரசியலமைப்பை அரசாங்கம் துரிதமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் மூலம் நம்பிக்கையை உருவாக்குவதை முதலாவது படிமுறையாக மேற்கொள்ளலாம் என்பது எமது நம்பிக்கையாகும்.

5. அதற்காக அரசாங்கம் தனது தயார்நிலையை உடனடியாக நாட்டுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும்.

6. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பேணுவதற்கு அல்லது பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனநாயக விரோத உத்திகளைப் பிரயோகிக்காமல், திறந்த உரையாடலை ஆரம்பிக்க வேண்டியதுடன், அனைத்துத் தரப்பினர்களும் தொடர்ந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடாமல் நெருக்கடியின் மோசமான நிலைமையைச்


சரியாகப் புரிந்து கொண்டு அதற்காக நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

7. எதிர்க்கட்சிகளாயினும் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான சவால்களின் மத்தியில் அரசியல் இலாபங்களைக கருத்தில் கொள்ளாமல் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் அனைவரும் நடந்துகொள்ளும் விதத்திற்கமையவே, எதிர்வரும் தேர்தல்களில் வாக்காளர்களும் நடந்துகொள்வார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் அரசியல், இனம், மதம் மற்றும் வகுப்பு வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல், அதிகாரப் போட்டிகளை புறந்தள்ளிவிட்டு செயலாற்ற வேண்டிய தருணம் எழுந்துள்ளது.

தேர்தல்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் அரசியல் நிலைபேற்றுத்தன்மை மாத்திரம் அதற்கான நிரந்தரத் தீர்வாக அமையாது. தொடர்ந்துவரும் இரண்டு வருடங்களுக்காவது நாம் பொது வேலைத்திட்டமொன்றுக்குச் செல்ல வேண்டும். அதற்காக சமகால அரசாங்கம் நேர்மையுடன் மக்கள் எதிர்பார்ப்பாட்டங்கள் தொடர்பாக இயன்றளவு கவனம் செலுத்தி நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு சட்டகத்திற்கமைய தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தாமதிக்கு ஒவ்வொரு தினமும் விரக்தி அதிகரிப்பதுடன், அவர்களை போராட்டங்கள் மீது மேன்மேலும் தீவிரமடையவும் செய்யும்.



ரோஹன ஹெட்டியாராச்சி

நிறைவேற்றுப் பணிப்பாளர்

2022-04-15

## Let's do not underestimate the people's struggle – Be a responsible people's representative.

It seems that the present government is underestimating and neglecting their responsibility as people's representatives in the face of the social struggle triggered by the hardships faced by the people as a whole due to the serious economic and socio–political crisis that Sri Lanka is currently facing. The PAFFREL deeply regrets the irresponsible conduct of the Government, Members of the Parliament and The party leaders in the past few days.

Although the people's struggles consolidate the democratic framework, they imply the failure and the inefficiency of the rulers. We wish to emphasize that the responsibility of finding a sustainable solution to the current problem within the framework of the Constitution lies in the incumbent President and the Cabinet Ministers and the Parliament as well.

However, neither the government nor parliament has been able to come up with an adequate program or a plan of action in this respect. At least not enough attention has been paid to have it included in the agenda of the Parliamentary sittings scheduled to be convened on the 19th, 20th and 21st of April 2022. It could result in exacerbating the revulsion of the public against people's representatives. At the same time, the country is heading towards a serious economic abyss. Apparently, you will not be able to escape the responsibility if the social unrest develops to an uncontrollable level creating a violent atmosphere in the country leading to loss of human lives.

Therefore, at this crucial moment, the government, led by the President and the Parliament should meet immediately and come up with their solutions to address the problems. However, it is surprising that the Parliament does not meet regularly when the country is in such an economic and political crisis.

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

As an election monitoring organization, PAFFREL has contributed to all the elections to create an equal ground of contest for all the People's Representatives. Therefore, we would like to emphasize several facts to the People's Representatives of the Government and the Opposition for their immediate attention.

1. The government should admit the fact that there is a serious economic and socio-political crisis in the country, for which they are also responsible and, realize that finding solutions for them is their prime responsibility
2. The leaders representing the government should immediately stop making unscrupulous statements that underestimate the people's struggle.
3. They should refrainfrom all attempts to dilute the struggle disregarding the message given by the people's struggle, quoting the mandate obtained in the last election.
4. As the public confidence in most of you has now been eroded drastically, the government should take at least the minimum possible steps that are acceptable to them with immediate effect to restore the level of confidence. We are of the view that the first step in this direction could be initiated by the Government by restoring the 19th Amendment with necessary positive changes and place before the Parliament immediately.
5. The readiness of the government and to take immediate positive measures to address the crisis should be placed before the country immediately.
6. Instead of adopting anti-democratic tactics to retain or gain the majority in Parliament, it is important that an open dialogue should be initiated and all parties make a sincere effort to comprehend the seriousness of the crisis without engaging in political games any more.
7. The opposition political parties also should act responsibly in the face of the grave challenge facing the country, regardless of the issues of political merits or disadvantages.

It is important to keep in mind that your conduct at this moment will certainly have a direct impact on the behavior of the voters in future elections.
At this juncture, all of us are faced with a situation where we should set aside power struggles and act in unison, regardless of political, ethnic, religious or class differences.

The political stability secured through elections alone will not be a permanent solution to this crisis. It is necessary that we should have a common program, at least for the next two years in order to achieve this end. The present government should take immediate action to find a solution within the existing constitutional framework, paying sincere attention to the public protest. With each passing day, the discontent and restlessness of the people will increase pushing them further towards the civil disobedient.

Rohana Hettiarachchi
Executive Director